DEPOSITION OF WITENSSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, KALLAKURICHI.

| | | |
|---|---|---|
| Name | : அசைன் | **CC. 339/2017** |
| Father's/Husband's Name | : பாபாஜான் | |
| Village | : கள்ளக்குறிச்சி | |
| Taluk | : | |
| Caste | : | Prosecution – PW 8 (LW 4) |
| Calling | : | Defence - |
| Religion | : | Court - |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.04.2024.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய காவலர் திரு.கணேசமூர்த்தி 792 அடையாளம் காட்டி ஆஜர் செய்தார்.

**முதல் விசாரணை**

1. நான் கள்ளக்குறிச்சியில் வசித்து டெய்லர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோரை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் தான். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் கள்ளக்குறிச்சியில் வெளிநாட்டிற்கு அழைத்துச்செல்லும் ஆபீஸ் வைத்துள்ளார்கள். சுமார் 5 - 6 வருடங்களுக்கு முன்பாக மூசாபாய் மற்றும் 3 பெண்கள் உமரா செல்வதற்காக 1ம் எதிரியிடம் பணத்தை கட்டினார்கள். ஆனால் 1ம் எதிரி அவர்களை உமரா பயணத்திற்கு அழைத்துச்செல்லவிலலை என்று மூசாபாய் என்னிடம் சொல்லியிருந்தார். நான் 1ம் எதிரியிடம் பேசியபிறகு அவர் அடுத்தமுறை அழைத்துச்செல்வதாக சொன்னார். (End of Para)

2. அதன்பிறகு 1ம் எதிரி மூசாபாய் உள்ளிட்டோரை உமரா பயணத்திற்கு அழைத்துச்செல்வதாக விமான நிலையம் வரை வரழைத்துவிட்டு அழைத்துச்செல்லவில்லை என் மூசாபாய் என்னிடம் தெரிவித்தார். அதன்பின்பு ஜமாத்தாருடன் சென்று நான் 1ம் எதிரியிடம் பணத்தை திரும்பிக்கேட்டேன் அவர் கொடுக்கமுடியாது என்று தெரிவித்துவிட்டார். அதன்பின்பு மூசாபாய் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். (End of Para)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. அ.சா.1 முதல் 3 வரையிலானோர் எனக்கு நெருங்கிய சொந்தம் என்றால் சரிதான். 1ம் எதிரி ஏற்பாடு செய்ததின் பேரில் எனது சகோதரர் உமரா பயணம் சென்றுள்ளார், நான் சென்றதில்லை. அதில் எந்தவித பிரச்சனையும் எனது சகோதரருக்கு ஏற்படவில்லை. பயணத்திற்கு தேவையான பணத்தை முறையாக கொடுத்துவிட்டார்

எந்த சிறமமும் இன்றி 1ம் எதிரி அழைத்துச்சென்று வருவார் என்றால் சரிதான். மூசா என்பவர் ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் மூசாபாய் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தின்போது அ.சா.3 படித்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். வயதானவர்களாக இருந்தால் மட்டும்தான் உமரா பயணம் செல்ல உடன் ஒருவர் செல்வார்கள், மற்றபடி தனியாகவே சென்றுவிடுவார்கள். முதல் முறை உமரா பயணத்திற்கு ஏற்பாடு செய்து செல்ல முடியாமல் போனதை பற்றி மூசா என்னிடம் சொல்லியிருந்தார். (End of Para)

4. 1ம் எதிரி எங்கள் மீது விழுப்புரம் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதற்கான விசாரணை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. 2ம் முறை பயணம் தடை பட்டதற்கான காரணம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் விமான கட்டணத்தை செலுத்தாததால்தான் என்று மூசா என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் ஏற்பாடு செய்திருந்த பயணம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் எனது உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் தான் முறையாக பயண கட்டணத்தை செலுத்தவில்லை என்றாலும், அதனால்தான் அவர்களால் உமரா பயணம் செல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல. புகார் கொடுக்கப்பட்ட பின்பு போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்தார்கள். மூசாவின் ஏற்பாட்டின் பெயரில்தான் எங்களை காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். (End of Examination)

J HARIHARASUDHAN

Digitally signed by J HARIHARASUDHAN
Date: 2024.04.25 17:28:31 -0500

DEPOSITION OF WITENSSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, KALLAKURICHI.

**CC. 339/2017**

| | | |
|---|---|---|
| Name | : உசைன் | |
| Father's/Husband's Name | : பாபாஜான் | |
| Village | : கள்ளக்குறிச்சி | |
| Taluk | : | |
| Caste | : | Prosecution – PW 9 (LW 5) |
| Calling | : | Defence - |
| Religion | : | Court - |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.04.2024.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய காவலர் திரு.கணேசமூர்த்தி 792 அடையாளம் காட்டி ஆஜர் செய்தார்.

**முதல் விசாரணை**

1. நான் கள்ளக்குறிச்சியில் வசித்து பிரியாணி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோரை தெரியும். அவர்கள் எனது தூரத்து உறவினர்கள் தான். ஆஜர் எதிரிகளைத் தெரியும், அவர்களின் ஏற்பாட்டில் நான் ஒருமுறை மெக்கா பயணம் சென்றுள்ளேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக திருக்கோவிலூரை சேர்ந்த மூசா என்பவர் எங்கள் ஜமாத்திற்கு வந்து 1ம் எதிரியிடம் பணம் கொடுத்தும் மெக்கா, மதினாவுக்கு அழைத்துச்செல்லவில்லை என்று கூறினார். நான் பஞ்சாயத்து பேச சென்றதும், 1ம் எதிரி அடுத்தமுறை அழைத்துச்செல்வதாக தெரிவித்திருந்தார். அதன்பின்பு 1ம் எதிரி மூசா உள்ளிட்டோரை சென்னை விமான நிலையத்திற்கு வரவழைத்துவிட்டு அங்கிருந்து மெக்கா, மதினாவிற்கு அழைத்துச்செல்லவில்லை என்று மூசா என்னிடம் தெரிவித்தார்கள். ஆனால் நான் 1ம் எதிரியிடம் பஞ்சாயத்து பேச செல்ல மறுத்துவிட்டேன். அதன்பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக கேள்விபட்டேன். அதன்பின்பு என்னை விசாரணை செய்ய தொலைபேசியில் போலீசார் அழைத்தார்கள், நான் வெளியே இருந்தேன். இன்றுதான் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். (End of Para)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எங்கள் ஜமாத்தில் விசாரணை செய்யப்படவேண்டும் என்றால், புகாரானது மனுவாக கொடுக்கப்படவேண்டும் என்றாலும், மூசாவால் மேற்படி சம்பவம் குறித்து மனு எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு கொடுக்கப்படும் புகாரை ஜமாத்தில் பதிவேட்டில் பதிவு செய்து இருதரப்பினருக்கும் பதிவு தபால்கள் அல்லது நேரடியாக தகவல் கொடுத்தும் விசாரணை செய்யப்படும் என்றால் சரிதான். மூசாவின் புகார் எங்களது ஜமாத்தின் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

எங்கள் ஜமாத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் எவரேனும் ஒருவராக இருந்தால் மட்டும்தான் புகாரானது விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளப்படும் என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர்களும், மூசாவும், ஆஜர் எதிரிகளும் எங்களது ஜமாத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் முதல் முறை ஏற்பாடு செய்த பயணமானது அவர்களின் இயலாமையால்தான் தடைபட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. (End of Para)

3. மேற்படி நபர்கள் என்னிடம் 1ம் எதிரி மேலும் பணம் கேட்பதாக தெரிவித்தார்கள். மூசா சொல்லிதான் முதல் விசாரணையில் சொல்லியவற்றை நான் சொன்னேன் என்றால் சரியல்ல, என் முன்பாகத்தான் 1ம் எதிரியின் அலுவலகத்தில் நடந்தது. எதிரிகள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் மீது அவர்கள் விமான கட்டணம் செலுத்தாததால்தான் பயணம் தடைபட்டது என்று விழுப்புரம் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார்கள் என்றாலும், அதில் அவர்கள் விசாரணை செய்யப்பட்டார்கள் என்றாலும் சரிதான். அந்த விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் விமான கட்டணம் செலுத்துவார்கள் என்று கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையில் தான் 1ம் எதிரி விமான டிக்கெட் எடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உமரா பயணத்திற்கு ஏற்பாடு செய்தபின்பு அந்த பயணத்திற்கான பணத்தை திரும்ப கொடுக்க இயலாது என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோரை நான் சந்தித்ததே இல்லை என்றாலும், அவர்கள் எனது உறவினர்கள் என்பதாலும் மூசா கேட்டுக்கொண்டதன் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (End of Examination)

J HARIHARASUDHAN Digitally signed by J HARIHARASUDHAN Date: 2024.04.25 17:28:45 -0500

DEPOSITION OF WITENSSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, KALLAKURICHI.

| | | | |
|---|---|---|---|
| Name | : | முகமது கசீம் | **CC. 339/2017** |
| Father's/Husband's Name | : | ஷேக் தாவுத் | |
| Village | : | கள்ளக்குறிச்சி | |
| Taluk | : | | |
| Caste | : | | Prosecution – PW 10 (LW 6) |
| Calling | : | | Defence - |
| Religion | : | | Court - |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.04.2024.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய காவலர் திரு.கணேசமூர்த்தி 792 அடையாளம் காட்டி ஆஜர் செய்தார்.

**முதல் விசாரணை**

1. நான் கள்ளக்குறிச்சியில் வசித்து பஞ்சர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோரை தெரியும். அவர்கள் எங்கள் ஜமாத்திற்கு வந்துள்ளார்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும், அவர்கள் டிராவல்ஸ் வைத்துள்ளார்கள். எப்போது என்று ஞாபகமில்லை, ஆனால் ஒரு நாள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் கள்ளக்குறிச்சி கோட்டைமேடு ஜமாத்திற்கு வந்து அவர்கள் 1ம் எதிரியிடம் உமரா பயணத்திற்காக பணம் கொடுத்ததாகவும், ஆனால் அழைத்துச்செல்லவில்லை என்றும், அதனால் அவரிடமிருந்து பணத்தை வாங்கித்தருமாறும் தெரிவித்தார்கள். அதனால் எங்கள் ஜமாத்தை சேர்ந்த அ.சா.9 உசேன், அ.சா.8 அசேன் மற்றும் நான் ஆகியோர்கள் 1ம் எதிரியின் அலுவலகத்திற்கு சென்று பேசினோம், அவர் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோரை அழைத்துச்செல்வதாக சொன்னார் அதன்பின்பு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. (End of Para)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எங்களது ஜமாத்திற்கு அ.சா.9 உசேன் தலைவராகவும், அ.சா.8 அசேன் செயலாளராகவும் இருந்தார்கள். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் மேற்படி நபர்களுக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. அ.சா.9-யிடம் யார் யார் புகார் கொடுத்தார்கள் என்ற பெயர் விபரம் எனக்கு தெரியாது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோருக்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன பண பரிவர்த்தனை நடந்தது

என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் அ.சா.8 மற்றும் அ.சா.9ற்கு உறவினர் என்பதால் அ.சா.8 மற்றும் அ.சா.9 கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோருக்கு எந்த தொகையும் கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும், நான் சொல்வதுபோல நாங்கள் எதிரிகளிடம் எந்த பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. (End of Examination)

J HARIHARASUDHAN
Digitally signed by J HARIHARASUDHAN
Date: 2024.04.25 17:29:02 -0500